முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.பி.எல்.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2024 ம் வருடம் டிசம்பர் மாதம் 18 ம் நாள் புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2055 – ஸ்ரீ குரோதி வருடம் - மார்கழி திங்கள் 03 ம் நாள்)
நிறைவேற்று மனு எண்.183/2019
அசல் வழக்கு எண்.322/2013

ஏ.செல்வகுமார். .. மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

// எதிர் //

பி.ஜி.ஆறுமுகம் .. எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி

28.08.2019, 12.04.2019 தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 21 விதி II(2) மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் கடந்த 16.02.2015 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் தீர்ப்பாணைத் தொகையை வசூல் செய்ய எதிர்மனுதாரருக்குச் சொந்தமான அசையாச் சொத்தான மனுச் சொத்தை ஜப்தி செய்து ஏலத்தில் விட்டு தீர்ப்பாணை தொகையை வசூலிக்க உத்தரவிடக் கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 09.12.2024 ம்தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.செந்தில்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் அவரை பொருத்து ஒருதலைபட்சமாக உத்தரவிடப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## உத்தரவு

அசையாச் சொத்தான மனுச் சொத்தை ஜப்தி செய்து ஏலத்தில் விட்டு தீர்ப்பாணை தொகையை வசூலிக்க கோரி மனுதாரரால் இந்த மனு உ.வி.மு.ச. கட்டளை 21 விதி II(2) மற்றும் பிரிவு 151 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு.

2. மனு உரையின் சுருக்கம்:

மனுதாரர் அசல் வழக்கு எண்.322/2013 ஐ

எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளிக்கு எதிராக தாக்கல் செய்து அதில் கடந்த 16.02.2015 ம் தேதியில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த தீர்ப்பாணைக்கு பிறகு எதிர்மனுதாரர் தொகை செலுத்தாததால் மனுவில் கொடுக்கப்பட்டுள்ள சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியம் என்பதால் அந்த சொத்தினை ஜப்தி செய்து ஏலத்தில் விட்டு தீர்ப்பாணை தொகையை வசூலிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர் உரை தாக்கல் செய்யாததாலும், நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜரின்மையாலும் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>பிரச்சினைக்குத் தீர்வு</u>:

மனுதாரர் தரப்பில், மனுதாரர் அசல் வழக்கு எண்.322/2013 ஐ எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளிக்கு எதிராக தாக்கல் செய்து அதில் கடந்த 16.02.2015 ம் தேதியில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த தீர்ப்பாணைக்கு பிறகு எதிர்மனுதாரர் தொகை செலுத்தாததால் மனுவில் கொடுக்கப்பட்டுள்ள சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியம் என்பதால் அந்த சொத்தினை ஜப்தி செய்து ஏலத்தில் விட்டு தீர்ப்பாணை தொகையை வசூலிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டுள்ளது.

5.2 மனு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு எண்.322/2013 ஐ தாக்கல் செய்து அதில் ஈரோடு முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் கடந்த 16.02.2015 தேதியில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பாணையின் நகல் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பாணைக்கு பிறகு எதிர்மனுதாரர் தொகையை செலுத்தாததால் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு சொத்தை ஜப்தி செய்து ஏலத்திற்கு உட்படுத்தி தொகையை வசூல் செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. எதிர்மனுதாரருக்கு மனு சொத்து பாத்தியப்பட்டதாக கூறி எதிர்மனுதாரரின் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. தற்போது இந்த மனு விசாரணையின் போது 01.01.1975 முதல் 19.11.2021 வரையிலான வில்லங்க சான்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. வில்லங்க சான்று படி மனு சொத்து இன்று வரை எதிர்மனுதாரர் பெயரில் உள்ளது தெரியவருகிறது. அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டுவிட்டதாவோ, மாற்றி அமைக்கப்பட்டுவிட்டதாகவோ, அல்லது மேல்முறையீடு நிலுவையில் இருப்பதாகவோ எதிர்மனுதாரர் இம்மனுவில் ஆஜர் ஆகி எதுவும் கூறவில்லை. எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணை இன்றுவரை அமலில் உள்ள நிலையில் எதிர்மனுதாரரிடம் இருந்து தீர்ப்பாணை தொகையை வசூலிக்கும் பொருட்டு எதிர்மனுதாரர் தொகை செலுத்தாததால் மனுவில் கண்டுள்ள சொத்தை ஜப்தி செய்து ஏலத்திற்கு உட்படுத்த உத்தரவிடுவதன் மூலம் தான் தீர்ப்பாணையை நிறைவேற்ற முடியும் என்பதால் இம்மனு அனுமதிக்கதக்கது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக,

இம்மனு செலவு தொகையுடன் அனுமதித்து மனு சொத்து விபரத்தில் கொடுக்கப்பட்டுள்ள எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஜப்தி செய்து ஏலத்திற்கு உட்படுத்த உத்தரவிடப்படுகிறது. ஜப்தி உத்தரவை சார்பதிவாளருக்கு தெரியப்படுத்த உத்தரவிடப்படுகிறது. ஜப்தி செய்ய வாய்தா 29.01.2025 படி செலுத்த கால அவகாசம் ஒரு வாரம்.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு பின்பு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2024 ம் வருடம் டிசம்பர் மாதம் 18 ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S VIJAY ALAGIRI
Digitally signed by S VIJAY ALAGIRI
Date: 2024.12.18 17:52:07 +0530

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
ஈரோடு.

சாட்சிய சான்றாவணப் பட்டியல்

(.. தாக்கல் இல்லை..)

S VIJAY ALAGIRI
Digitally signed by S VIJAY ALAGIRI
Date: 2024.12.18 17:52:14 +0530

மு.கூ.சா.நீ., ஈரோடு.